RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s222713

OPEN ACCESS

# ராஜம் கிருஷ்ணன் - ரோஜா இதழ்கள் நாவலின் செல்நெறிகள்

அ. உபகாரச்செல்வி [அ, *], ச. வனிதா [அ]

[அ] முதுகலைத் தமிழியல் மற்றும் உயராய்வுத்துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கிண்டி, சென்னை-600032, தமிழ்நாடு, இந்தியா

# Rajam Krishnan's Roja Ithalgal Novel

A. Ubakaraselvi [a, *], S. Vanitha [a]

[a] PG and Research Department of Tamil, Chellammal Women's College, Guindy, Chennai-600032, Tamil Nadu, India

* Corresponding Author:
allanpaul21@gmail.com

Received: 26-09-2022
Revised: 11-11-2022
Accepted: 16-11-2022
Published: 05-12-2022

Check for updates

## ABSTRACT

Literature is what portrays the human life in society. Notable among those literature is novels. Author Rajam Krishnan through his novel Roja Ithalgal not only highlights the problems faced by women in the society but also brings out the solutions for the problems and makes people aware of it. In this novel, the main character is a girl who falls in love in her youth. After that she is chased out of the house. That was her first problem and it becomes the main reason for her upcoming problems. Humans make mistakes. But you should give a chance to correct it. But this girl is not given a chance. Through this the author says that it is important to discipline people. In this novel, although many problems for women are caused by men, the author points out that there are some good men too. The author of this novel reveals the status of women in politics. In this article we can read that even though the country gained independence, women lacks freedom. The author says in this novel that when many problems occur to women, it is the majority of the women who help them to come out of the problems. Descriptive method is used in this article.

**Keywords:** Feminism, Problems, Political field, Education, Relationships

## முன்னுரை

இலக்கிய உலகில் நாவல் சிறந்த இடத்தைப் பெற்றுள்ளது. பெண்களின் பிரச்சனைகளை வெளிக்கொணர்வதில் முக்கிய பங்காற்றுகிறது நாவல். நாவல் சமூகச்சீர்திருத்தக் கருவியாக செயல்படுகிறது. கடந்தகால, நிகழ்கால பிரச்சனைகளை வெளிக்கொணரும் கருவியாக நாவல் திகழ்கிறது.

பெண்களுக்கு எக்காலத்திலும் ஆண்களால் பலவிதமான இன்னல்கள் வந்துகொண்டேதான் இருக்கின்றன. பெண்களுக்கு ஏற்படும் மனக்குமுறல்களையும், ஆண்களால் ஏமாற்றப்பட்டபிறகு அப்பெண்ணானவள் இவ்வுலகில் வாழ போராடும் போராட்டங்களையும் பெண்ணே சிறப்பாக வெளிப்படுத்த முடியும் என்பதை “ரோஜா இதழ்கள்” நாவல் மூலம் அறியமுடிகிறது.

இன்றைய சமுதாயம் மரபைவிட்டு வெளிவந்தாலும், பெண்களைப் பொறுத்தவரையில் சாதி, மதம் என்ற மரபில் இன்னும் வெளிவர முடியாமல் தான் இருக்கிறார்கள். இந்நிலையில் இருந்து வெளிவர வேண்டும் என்று “ராஜம் கிருஷ்ணன்” தம்முடைய படைப்பின் மூலம் எடுத்துக்கூறுகிறார்.

“ஆராய்ந்த பின் நம்புங்கள்” (Puliyoor Kesikan, 2010)

தமக்கு அன்பு உடையவர்களாக விளங்குபவர்களிடத்தினும், அவர்களை முழுவதும் ஆராயாதவனாகி நம்பிக்கை கொண்டவன், உறுதியாகக் கெட்டே போவான்" என்ற பழமொழிக்கு ஏற்ப இந்நாவலில் வரும் கதாப்பாத்திரமான மைத்ரேயி, தன் காதலனைப்பற்றி முழுவதும் அறியாமல் இருந்ததே அவள் துன்பத்திற்கு முதல் காரணமாக அமைந்துவிட்டது. இதன் மூலம் எந்த ஒரு செயலிலும், நிகழ்விலும் முதலில் அதன் உண்மைத்தன்மையை ஆராய வேண்டும் என்பதை ஆசிரியர் இங்கு கூற வருவதை அறிய முடிகிறது.

இந்நாவலில் நெறியப்படுத்ததவறிய உறவுகளால், பெண்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள், ஆதரவற்றோர் இல்லம் அடைக்கலம் கொடுத்தாலும், அங்கு பெண்களுக்கு, பெண்களால் சில மனவேதனைப்படும் செயல்கள் நிகழ்வதையும், பெண்களுக்கு மதத்தால் ஏற்படும் இன்னல்களையும், கல்வி பெண்களுக்கு அடிப்படைத்தேவைகளில் முக்கியமானது என்பதையும் ஆண்களில் சில நள்ள உள்ளங்கள் இருப்பதையும், அரசியல் பெண்களின் நிலை எவ்வாறு உள்ளது என்பதையும், பெரும்பான்மையாக பெண்களுக்கு, பெண்களே உதவி செய்கின்றனர் என்பதையும், இக்கட்டுரையின் வாயிலாக ஆசிரியர் ராஜம் கிருஷ்ணன் அவர்கள் கூறவருவதை இங்கு காணலாம்.

## நெறிப்படுத்த தவறிய உறவுகள்

முக்கியமாக இளம் வயதில் பெண்களை கவனிப்பதிலும், வழிப்படுத்துவதிலும், அவர்களின் எண்ணங்களை அறிவதிலும் பெற்றோருக்கும், உடன் பிறந்தவர்களுக்கும் முக்கிய பங்கு உண்டு. இந்நாவலின் முக்கிய கதாபாத்திரமான மைத்ரேயி பெற்றோரை இழந்து, அக்காவிடம் வளர்கிறாள். அக்கா தடைகளை மட்டுமே கூறுபவளாக இருக்கிறாள். அன்பை செலுத்துவதிலோ, தவறான செயல்களில் ஈடுபடுவதால் தன் வாழ்க்கைக்கு ஏற்படும் விளைவுகளை எடுத்துக்கூறி நெறிபடுத்துவதில் தவறிவிட்டால்.

மைத்ரேயி, தனராஜிடம் காதல் வயப்பட்ட பின், அக்காவிற்கு அக்காதல் தெரிகிறது. அவளை வீட்டை விட்டு வெளியேற்ற முடிவு எடுத்திருக்கிறார்களே தவிர, அவளுக்கு ஒரு வாய்ப்பு கொடுத்து, இந்த காதலால் ஏற்படும் விளைவுகளை எடுத்துக் கூறவில்லை. தன் குலத்திற்கு அவமானத்தை தந்துவிட்டாள் என்றுதான் எண்ணினார்கள்.

"சிறு குழந்தைகளாக இருக்கும் போது உள்ள சகோதர உறவுகளுக்கும், பெரியவர்களான பிறகு உள்ள சகோதர உறவுகளுக்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. சிறுவயதில் ஏற்படுகின்ற சண்டை சச்சரவுகள் தற்காலிகமானவை. பெரியவர்களான பிறகு ஏற்படுகின்ற சண்டைகள், மன வேறுபாடுகள் ஆழமானவையாக அமைந்து விடுகின்றன. பெரிய போராட்டங்களுக்கும், விரோதங்களுக்கு வழிவகுத்து விடுகின்றன." (Ganeshan, 2019)

இந்நாவலில் இடம்பெறும் மைத்ரேயி மற்றும் அவளுடைய அக்கா இவர்களின் உறவும் மேலே கூறியது போல பெரிய போராட்டங்களுக்கும், விரோதங்களுக்கும் வழிவகுக்கின்றன. இந்நாவலின் ஆசிரியர் உறவின் கடமைகளை வெளிக்கொனர்கிறார்.

## ஆதரவற்றோர் இல்லம்

மைத்ரேயி ஆதவற்றோர் இல்லத்தில் சேர்கிறாள். அவள் அங்கு பல பிரச்சினைகளை சந்திக்க நேரிடுகிறது. அந்த இல்லத்தில் பல பெண்கள், ஆண்களால் பாதிக்கப்பட்டும், கைவிடப்பட்டும், கர்ப்பிணியாகவும் அங்கு தங்குகிறார்கள். அப்பெண்கள் பள்ளிப்படிப்பையும், கல்லூரிப்படிப்பையும் தொடர்கிறார்கள். அவ்விடுதியில் கைத்தொழிலும் கற்றுக்கொடுக்கிறார்கள். சிலப் பெண்கள் வெளியில் சென்று அவர்களுக்குத் தெரிந்த பணியில் ஈடுபட்டும் வருகிறார்கள். மைத்ரேயியை அவ்விடுதியில் உள்ள சில பெண்கள் இழிவான சொற்களைக் கூறி அவமானப்படுத்துகிறார்கள். அவள் கோபத்திற்கும், மன உலைச்சளுக்கும் ஆட்படுகிறாள்.

"துன்பத்திற்கு அஞ்சவேண்டாம்" (Puliyoor Kesikan, 2010)

“செய்யத்தக்கது இதுவென உணரும் அறிவுடையவர்கள், தம்மால் மிகவும் பயப்படத்தக்கதான துன்பங்கள் வந்தாலும், தம்மிடத்தே உண்டாகும் துன்பத்துக்கு ஒருபோதும் அஞ்சமாட்டார்கள்” என்பதற்கிணங்க ஆசிரியர் ராஜம் கிருஷ்ணன் மைத்ரேயி என்னும் கதாப்பாத்திரத்தின் மூலம் பெண்களுக்கு எவ்வளவு துன்பங்கள் நேரிட்டாலும் அதற்கு வருத்தப்பட்டு அதோடு நில்லாமல் அடுத்தக் கட்டத்தை நோக்கிச் செல்கிறவர்கள் பெண்கள் என்பதை கூறவருவதை நம்மால் உணரமுடிகிறது.

எந்தவொரு நிறுவனத்தை எடுத்துக்கொண்டாலும் அங்கும் சில பிரச்சினைகள் நடந்து கொண்டேதான் இருக்கின்றன. இந்த விடுதியிலும் சாதியப் பிரச்சினைகள், மற்றும் பெண்கள் பெண்களுக்கு மன வருத்தத்தை தரும் செயல்களையும் செய்வதை இந்நாவல் மூலம் ஆசிரியர் விளக்குவதை அறிய முடிகிறது.

## மதத்தால் ஏற்படும் இன்னல்கள்

உலகில் மனித சமூகத்தின் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் தடையாயிருப்பது மதம் தான். வெற்றியின் முதற்படியில் காலடி எடுத்துவைக்கும் போதே மதம் அவள் காலை இழுத்துத் தள்ளிவிடுகிறது.

மைத்ரேயின் காதலனான தனராஜ் தன் மதத்தைச்சார்ந்தவனாக இருந்திருந்தால், அடித்து திட்டிய பிறகு வீட்டிற்குல் சேர்த்திருப்பாள், ஆனால் தனராஜ் வேறு குலத்தைச் சார்ந்தவன். இதனால் மைத்ரேயும் வெளியேறவேண்டிய நிலை மதத்தினால் உருவாகி உள்ளதை ஆசிரியர் கூறவருவதை அறியமுடிகிறது.

மதுரம் என்ற கதாப்பாத்திரத்தின் கணவர் மனைவிக்கோ, குழந்தைகளுக்கோ ஒன்றும் செய்யவில்லை. கணவன் இறந்தபிறகு அவளுடைய கொண்டைமுடி அறுக்கப்பட்டது. தலைமுடி நீக்கினால்தான் தன் குலத்திற்குல் அவள் நடமாடி, அவளையும், அவள் குழந்தைகளையும் காப்பாற்றமுடியும் என்ற நிலைக்கு தள்ளப்பட்டாள். இதற்கு காரணம் அவளுடைய குலமரபு. இதன்மூலம் ஆசிரியர் மதத்தால் பெண்ணுக்கு ஏற்படும் அவலநிலையை சுட்டிக்காட்டுகிறார். மனிதனின் பிறப்பை அடிப்படையாகக் கொண்டு மனிதனின் இருப்பிடம், தொழில், திருமணம், சடங்குகள், அதிகாரம் ஆகிய அனைத்தையும் தீர்மானிப்பது சாதிமுறையே.

## கல்வியின் முக்கியத்துவம்

பெண்கள் பல பிரச்சனைகளில் இருந்தாலும், கல்வி பெண்களுக்கு அடிப்படைத் தேவைகளில் ஒன்று என்பதை முக்கிய கதாப்பாத்திரமான மைத்ரேயின் மூலம் ஆசிரியர் தன் கருத்தை கூறுகிறார்.

“கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு

மாடல்ல மற்றை யவை” (Varadharasan, 2004)

ஒருவனுக்கு எவ்வகையிலும் அழிவே இல்லாத சிறந்த செல்வமாவது கல்வியே ஆகும். அது தவிர்ந்த பொன்னும், மணியும் பொருளும் செல்வம் அல்ல என்ற குறளுக்கு இனங்க நாவலில் மைத்ரேயி என்பவள் கல்வி கற்பதை தன் உயர்ந்த குறிக்கோளாக கொண்டுள்ளாள். பள்ளிப் படிப்பை முடிக்கும் முன் தன் வாழ்க்கையை இழந்து, உறவினர்களால் வெளியேற்றப்பட்டாள் அதன்பிறகு பள்ளிப்படிப்பை முடித்தாள். எம்.ஏ வரை படித்து, ஆராய்ச்சி படிப்பையும் தொடர வேண்டும் என்ற குறிக்கோளையும் கொண்டுள்ளாள்.

“ஓதல் பிரிவு ஆடவர்க்கு உரியதாக இலக்கண நூல்களில் குறிப்பிடப்படினும் சங்க காலத்தில் பெண்கல்வி மறுக்கப்பட்டமைக்குச் சான்று இல்லை. பெண்கள் கல்வியில் உயர்ந்திருந்தனர் என்பது ஒளவையார், காக்கைப்பாடினியார், வெள்ளிவீதியார் போன்ற பெண்பாற் புலவர்களின் பாடல்களால் புலனாகிறது (Ramakirutnan, 2005).

என்பதற்கு இணங்க பெண்கள் கல்வி கற்பது என்பது தற்காலத்தில் தோன்றியது அல்ல. சங்க காலத்தில் இருந்தே பெண்களின் இரத்தத்தில் ஊரிய ஒன்றாக கல்வி இருப்பதை அறியமுடிகிறது. எனவே பெண்ணானவள் எவ்வளவு துன்பத்திற்கு உட்பட்டாலும், அதில் இருந்து மீண்டுவர கல்வி உதவும் என்பதை ஆசிரியர் கூறவருவதை உணரமுடிகிறது.

## பாத்திரப்படைப்பு - தனராஜின் பெருந்தன்மை

“தனராஜ் திரைக் கவிஞர்”, “மைத்ரேயி எம்.ஏ. நம்ம ஸ்டார் ஸ்பீக்கர்” என்று சீனிவாசன் அவர்களை அறிமுகம் செய்து வைக்கிறார். “வணக்கம்” என்று அவன் தெரிவிக்கும் போது, அவனுடைய மரியாதையும், கொஞ்சமும் காட்டிக் கொள்ளாத பண்பும் அவளைப்பிரமிக்க வைக்கின்றன. இங்கு ஆசிரியர் ராஜம் கிருஷ்ணன் ஆண்களில் சில நல்ல உள்ளங்கள் இருப்பதை சுட்டிக்காட்டுவதை நம்மால் உணரமுடிகிறது.

## அரசியலில் பெண்கள் நிலை

சங்ககாலத்தில் இருந்தே பெண்கள் அரசியலில் செல்வாக்குப் பெற்று விளங்கினர். ஆனால் இப்போது உள்ள அரசியலிலோ அவ்வாறு இல்லை என்பதை ஆசிரியர் இந்நாவலின் மூலம் கூறுகிறார்.

இந்நாவலின் ஞானம் என்ற கதாபாத்திரம் அரசியலில் ஈடுபட்டு, தேர்தலுக்காக தன் வீட்டையே இழக்கநேரிட்டது. தேர்தலிலும் தோல்வியடைந்து, பொருளாதாரத்திலும் நலிவடைந்து காணப்பட்டாள் ஞானம்.

அதேபோல் மைத்ரேயும் அரசியலில் ஈடுபட்டு தேர்தலுக்காக, மேடை பேச்சிற்கு சென்றபோது மற்றவர்களால் கல்லெறியப்படுகிறாள். அதோடு அவளுக்கு அரசியலே வேண்டாம் என்ற நிலைக்குத் தள்ளப்படுவதை ஆசிரியர் இங்கு முன்வைக்கிறார்.

“புலவராக விளங்கி அரசர் மனத்திலும், அரசியலிலும் செல்வாக்குப் பெற்று விளங்கினர். பெண்பாற் புலவர்கள் அரசியலில் பெற்றிருந்த செல்வாக்கை விளக்கி நிற்கவல்லன. இப்பெண்பாற்புலவர்கள் தன்மானம் தாக்குறும் போது அரசனுக்கு அஞ்சாது அவன் முன் நின்று ‘எத்திசைச் செல்லினும் அத்திசைச் சோறே’ (புறநானூறு 200) எனச் செம்மாந்து கூறும் துணிவு கொண்டு விளங்கியமை காண்கிறோம் (Ramakirutnan, 2005).

சங்ககாலத்தில் அரசியலில் பெண்கள் அஞ்சாது நின்றதை உணரமுடிகிறது. தற்காலதிலோ ஒரு சில பெண் அரசியல் வேண்டாம் என்று ஒதுங்குவதை இந்நாவலின் மூலம் அறியமுடிகிறது.

## பெண்களுக்கு பெண்களே உதவி

ரோஜா இதழ்கள் நாவலில் வரும் அனைத்து பெண் கதாப்பாத்திரங்களும், தன் வாழ்க்கையில் தடுமாறும் நிலையில் அப்பெண்களுக்கு உதவி புரியும் நிறுவனமாகவோ, உதவிக்கரங்களாகவோ இருப்பது பெண்கள் மட்டுமே என்பதை ஆசிரியர் கூறுவதை அறியமுடிகிறது.

மைத்திரேயி, மதுரம் மாமியின் உடல்நிலையைக்கண்டு மிகவும் வருத்தப்படுகிறாள். தன்னால் இயன்ற உதவியை அவளுக்குச் செய்ய வேண்டும் என்று முடிவு எடுக்கிறாள். வேலைக்குச் சென்று மதுரம் மாமியையும், அவளின் குழந்தைகளையும் கவனித்துக்கொள்வதே தன் கடமையாக எண்ணி முடிவு எடுத்ததை ஆசிரியரின் இந்நாவலின் மூலம் அறியமுடிகிறது. இதன்மூலம் பெண்களின் உதவி மனப்பான்மையை அறியமுடிகிறது.

“எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை

செய்ந்நன்றி கொன்ற மகற்கு” (Varadharasan, 2004)

என்ற குறளுக்கு ஏற்ப மைத்ரேயி தனக்கு உதவிய மதுரத்திற்கு தன் வாழ்நாள் முழுவதும் உதவி செய்ய முடிவு எடுக்கிறாள். மதுரம் மாமி செய்த உதவியை மறக்காமல் உதவும் மனப்பான்மையை ஆசிரியர் இந்நாவலில் கூறவருவதை உணரமுடிகிறது. மதுரத்தின் உடல் நாற்றத்தைக் கண்டும், அவளுக்கு வந்துள்ள நோயைக்கண்டு மைத்ரேயி அஞ்சி ஓடவில்லை. மாறாக தனது முக்கிய கடமையாக உதவி செய்வதை மேற்கொண்டுள்ளாள்.

## முடிவுரை

பெண்கள் கல்வி கற்று ஆண்களுக்கு நிகராக பல்வேறு துறைகளிலும் ஈடுபடுவதால் பெண்கள் சுதந்திரம் பெற்றதாக நாம் நினைக்கிறோம் ஆனால் பெண்களுக்குரிய சுதந்திரமும், உரிமையும், மகிழ்ச்சியும் கிடைக்கவில்லை. பெண்களுக்கு மற்ற அணிகலன்களைவிட கல்வி முக்கியமான அணிகலன் என்பதை இந்நாவலில் அறியமுடிகிறது. குடும்பம், தொழில், அரசியல் என எல்லாத்துறைகளிலும் ஈடுபடுகின்றனர். விடாமுயற்சியையும், கடின உழைப்பையும் கொண்டவர்கள் பெண்கள். நாடு சுதந்திரம் பெற்றாலும், பெண்கள் தன் சுதந்திரத்திற்கு இன்னும் போராட வேண்டிய நிலையில் தான் உள்ளார்கள் என்பதை ரோஜா இதழ்கள் நாவல் மூலம் ஆசிரியர் கூற வருவதை அறியமுடிகிறது. பொதுவாழ்க்கையில் பெண்களுக்கு பெண்கள்தான் உதவிபுரிய முன்வருகின்றனர். நெறிபடுத்ததவறிய உறவுகளால் ஒரு பெண்ணுக்கு அவள் வாழ்க்கையையே புரட்டிப்போடுவதையும், ஆதரவற்றோர் இல்லத்திலும் பெண்கள் எதிர்கொள்ளும் இன்னல்களையும், ஒரு பெண்ணுக்கு மதத்தாலும் மதச் சடங்குமுறைகளாலும் அவள் இளமை வாழ்வானது மாறுவதையும், கல்வி அறிவு பெண்களுக்கு முக்கியமான ஒன்றாக விளங்குவதையும், பாத்திரப்படைப்பான தனராஜின் பெருந்தன்மையும், அரசியலில் பெண்களுக்கு ஏற்படும் இன்னல்களும், பெரும்பான்மையாக பெண்களுக்கு பெண்களே உதவிக்கரம் நீட்டுவர் என்பதையும், இக்கட்டுரையின் வாயிலாக ஆசிரியர் ராஜம் கிருஷ்ணன் அவர்களின் ரோஜா இதழ்கள் நாவலின் செல்நெறிகளை அறியமுடிகிறது.

## References

Ganeshan, B.C. (2019) Kudumba Prechanaikali Samalipathu Eppadi, Rajaji Puthaga Nilayam, Chennai, India

Puliyoor Kesikan, (2010) Pazhamozhi Naanooru, Gowra Publications, Chennai, India

Ramakirutnan, A. (2005) Tamilaga Varalarum Tamilar Panpaadum, Sarvothaya Elakiya Pannai, Madurai, India

Varadharasan, M. (2004) Thirukkural Thelivurai, The South India Saiva Siddhantha Works Publishing Society, Tinnevelly, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License